தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1977 ஜூலை 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: (திரு. பி. கே. மூக்கையாத் தேவர்). இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம் நேற்று காலை எனது அறையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் அவையில் அமரக் கூடாது.

(புதிதாக யாரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவில்லை.)

(1) பேரவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: பேரவையின் அடுத்த அலுவல் அரசியலமைப்பின் 178 ஆவது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். அப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின் 4. (4) விதியின்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டவர்கள், முன்மொழிந்தவர்கள், அதை வழிமொழிந்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. முனு ஆதி.

முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

வழிமொழிந்தவர்—மாண்புமிகு திரு. கி. மனோகரன்.

இரண்டாவது மனு :—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. முனு ஆதி.

முன்மொழிந்தவர்—திரு. ரா. மார்க்கபந்து.

வழிமொழிந்தவர்—திரு. பி. சந்திரன்.

ஆக, ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால் நான் திரு. முனு ஆதி அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (ஆரவாரம்).

இத்துடன் என்னுடைய அலுவல் இனிது முடிவடைகிறது. இப்போது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று, அவர்கள் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

அவை முன்னவர் மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள். (ஆரவாரம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மாண்புமிகு திரு. முனு ஆதி) இந்த மன்றத்தின் சம்பிரதாயப்படி துணைத் தலைவர் தேர்தலை நடத்திவிட்டு, பின்னால் பாராட்டுரைகளை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு, இப்போது துணைத் தலைவர் தேர்தலை நடத்தலாம் என்று எண்ணுகிறேன். அதற்கு முன்னால் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து என்னை இந்தப் பேரவைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு என் நன்றி கலந்த வணக்கத்தை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, இப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். இந்தச் சபையின் மரபைக் காப்பாற்றுவதற்கு எல்லா உறுப்பினர்களும் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.